# பவுலின் பார்வையில் இரக்கம்

**முன்னுரை**

தற்போதைய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அறிவித்து நிகழ்ந்தோரின் கொண்டிருக்கின்ற இறையிரக்க யூபிலி ஆண்டு இரக்கத்தின் பல்வேறு பரிமாணங்களை ஆழ்ந்து நோக்கவும், அலசி ஆராயவும் அதை நமது ஆன்மீக, சமய, சமூக தளங்களில் வாழ்வாக்கவும் கிடைக்கப் பெற்ற உன்னத வாய்ப்பு. இத்தருணத்தில் இரக்கம் பற்றிய விவிலியப் புரிதல் பிறபரிமாணங்களை விளங்கிக் கொள்ள மிகவும் அவசியமாகும். இந்தப் பின்னணியில் இக்கட்டுரை பவுலடியாரின் இரக்கம் பற்றிய புரிதலை விளக்க முயல்கின்றது.

இக்கட்டுரை பவுலடியாரின் மடல்களை மையமாக, ஆதாரமாக வைத்து, அவற்றில் இறையிரக்கத்தை பவுலடியார் தன் வாழ்விலும், பாணியிலும் எப்படித் துய்த்துணர்ந்தார் என்பதை முதலில் அவரது அனுபவத்திலிருந்து கோடிட்டு காட்டிவிட்டு, இரண்டாவது பகுதியில் அவரின் எழுத்துகளில் இறையிரக்கம் ஒரு கோட்பாடாக, இறையியல் தத்துவமாக எவ்வாறு புரிந்து கொள்ளப்பட்டது என்பதை விளக்க முயல்கின்றது. இந்த இரண்டாவது பகுதி அ. இறைத்தந்தையின் இயல்பு இரக்கம் ஆ. மீட்பின் வரலாற்றில் இறையிரக்கச் செயல்பாடு இ. இரக்கமாய் உருவெடுத்த இயேசு, ஈ. இயேசு நிகழ்வு உலகிலும், மாந்தரிலும் ஏற்படுத்தும் விளைவு, உ. செயல்பாட்டுக்கும் வாழ்வுநெறிக்கும் அழைக்கும் இரக்கம் ஆகிய உட்பிரிவுகளில் அலசப்படுகின்றது.

## I. பவுலின் வாழ்விலும் பணியிலும் இறையிரக்கம்

புனித பவுலடியாருக்கு இரக்கம் சமய தத்துவமாகவும், கோட்பாடாகவும் மட்டும் இல்லாமல் அவரது வாழ்வின் அனுபவமாகவும் இருந்தது. அவரது உடன் உழைப்பாளராக இருந்த 'எப்பப்பிராத்து' உடல்நலம் குன்றியிருந்தபோது "கடவுள் அவர்மேல் இரக்கம் கொண்டார்" (பிலி 2:27) எனக் குறிப்பிடுகின்றார். அங்கு தனது அனுபவத்தையும் இணைத்து, "அவர்மேல் மட்டும் அல்ல, துயரத்துக்குமேல் துயரம் எனக்கு நேராதபடி, என் மேலும் இரக்கம் கொண்டார்" (பிலி 2:27) எனக் குறிப்பிடுகின்றார்.

பவுலடியாருக்கும், அவரது உடன் உழைப்பாளருக்கும் நற்செய்தி அறிவிக்கும் திருப்பணி கிடைக்கப் பெற்றதும் "கடவுளின் இரக்கத்தால்" எனப் பதிவு செய்கின்றார் (காண். 2 கொரி 4:1). திமொத்தேயுவுக்கு எழுதிய முதல் மடலில் தனது கடந்த கால வாழ்வையும் அப்பின்னணியில் எவ்வாறு இரக்கத்தால் அப்பணி தனக்குக் கிடைத்தது என்பதையும் விவரித்து பின்வருமாறு குறிப்பிடுகின்றார்: "எனக்கு வலுவூட்டும் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு நன்றி செலுத்துகிறேன். ஏனெனில் நான் நம்பிக்கைக்கு உரியவன் என்று கருதி அவர் என்னைத் தம் திருத்தொண்டில் அமர்த்தினார். முன்னர் நான் அவரை பழித்துரைத்தேன்; துன்புறுத்தினேன்; இழிவுபடுத்தினேன். ஆயினும் நம்பிக்கை கொண்டிராத நிலையில் நான் அவ்வாறு நடந்ததால், அவர் எனக்கு இரங்கினார்" (1 திமொ 1:12–13, மேலும் காண். 1 கொரி 7:25). எனவே கடவுள் பாவியாகிய தனக்கு இவ்வாறு தம் திருத்தொண்டில் பங்களித்து இரங்கினாரென்றால் மற்றவர்களுக்கும் இந்த இரக்கம் காட்டுவார் என்பது சொல்லாமல் விளங்கும்.

எனவே இந்த இரக்கத்தை பல்வேறு திரு அவைகளுக்கான செபமாக பவுலடியார் பல்வேறு இடங்களில் ஏறெடுக்கின்றார்.[1] ஒனேசிப்போரின் வீட்டாருக்கு ஆண்டவர் இரக்கம் காட்டுவாராக என்றும் (2 திமொ 1:16), "இறுதி நாளில் ஆண்டவரிடம் இரக்கத்தைக் கண்டுகொள்ள அவருக்கு ஆண்டவர் அருள்வாராக!" (2 திமொ 1:18) என்றும் செபிக்கின்றார்.

எனவே இறைவனின் இரக்கம் தொடக்கத் திரு அவைக்கும், அதன் பணியாளர்களுக்கும் அன்றாட அனுபவமாக இருந்தது.

## II. இறையியல் கோட்பாடாக இறையிரக்கம்

இனி, பவுலடியார் இறையிரக்கத்தை இறையியல் கோட்பாடாக விளக்குவதைக் காண்போம். பவுலடியார் இறையிரக்கத்தை ஒரு கருத்தியலாக ஒரே இடத்தில் தனது மடல்களில் எங்கும் விவாதிக்கவில்லை. எனவே அவர் ஆங்காங்கே இறையிரக்கத்தைக் குறிக்கும் சொல்லாடல்களை

பயன்படுத்துவதிலிருந்து இந்த கருத்தியலை தொகுத்தளிக்க முயற்சி செய்கின்றேன். எனவே இறையிரக்கத்தைக் குறிக்கும் சொற்களை இவண் குறித்துக் காட்டிவிட்டு நமது விவாதத்தைத் தொடர்வோம்.

**சொல்லாடல்கள்:[2]**

பவுலடியார் இரக்கத்தைக் குறிக்கும் சொற்களை புதிய ஏற்பாட்டு மடல்களில் கிரேக்க மொழியில் பயன்படுத்தினாலும், அதன் வேர்கள், மூலமொழியாகிய எபிரேய விவிலியத்திலிருந்து பெறப்பட்டவையாகும். எனவே எபிரேய மொழியில் இரக்கத்தைக் குறிக்க இருவார்த்தைகள் முதன்மையாக பயன்படுத்தப் படுகின்றன. அவை, ஃ கெசத் (ஆங்கிலத்தில் Sreadfast Love என்றும் தமிழில் அன்பு அல்லது அருள் என்றும் மொழிபெயர்க்கப்படுகின்றது)[3], மற்றும் ரகாமிம் (இது begracious என மொழி பெயர்க்கப்படுகின்றது) என்பனவாகும். இவற்றுள் ஃகெசத் என்பது இருவருக்கிடையே கடப்பாடு எனும் பின்னணியில் சட்ட இயல்பைக் கொண்ட சொல்லாகும். ரகாமிம் என்பதின் வேர்ச்சொல்லான ரெகெம் என்பது தாயின் கருப்பையைக் குறிப்பதாகும். எனவே இது தாய்க்குரிய அன்பைச் சுட்டுகின்றது. இவ்வார்த்தைகள் எழுபதின்மர் மொழிபெயர்ப்பில் எலயோஸ் (pity), ஒயக்டிர்மோஸ் (mercy), மற்றும் ஸ்பிளாங்நிஸ்மோய் (moved with pity) என மொழி பெயர்க்கப்படுகின்றன. இந்த சொல்லாடல்களைப் பவுலடியார் பயன்படுத்தும் விதத்திலிருந்து இறையிரக்கம் பற்றிய கருத்தியலைக் காண்போம்.

**அ. இறைத் தந்தையின் இயல்பு இரக்கம்**

பழைய ஏற்பாட்டை மேலெழுந்தவாரியாக வாசிப்பவர்க்கு இறைவன் நீதியின் கடவுளாகவும், தண்டனைத் தருபவராகவும் தோற்றமளிப்பார். ஆனால் விவிலியத்தை ஊன்றி வாசிப்போருக்கு அவர் இரக்கம் நிறைந்தவர் என்பது விளங்கும். விப 34:6–7 இரக்கம் இறைவனின் இயல்பு என தெளிவாக்குகின்றனது.[4] மேலும் இறைவன் மீட்பின் வரலாற்றில் செயல்படுத்திய விடுதலைச் செயல்பாடுகள் எல்லாம் அவரது இரக்கத்தின் வெளிப்பாடுகளே.[5] திருப்பாடல்கள் இறைவனின் இரக்கத்தை முழங்குகின்றனர்.[6] இறைவாக்கினர்களின் போதனைகளில் இறையிரக்கம் முக்கிய இடம் பிடித்திருந்தது.[7]

இறைவனை இரக்கம் நிறைந்தவராகப் பார்த்த யூதப் பின்னணியிலிருந்து வந்த பவுலடியார் இறைவனை "இரக்கம் நிறைந்த கடவுள்" (2 கொரி 1:3 the father of mercies) என அடைமொழியிட்டு அழைக்கின்றார். இது விவிலியத்தில் சிறிது அறிதாக இருந்தாலும், பழைய ஏற்பாட்டின் இறையியலையும் புனித பவுலடியாரின் இறையியலையும் வெளிப்படுத்துவதாக உள்ளது. மேலும் எபே 2:4–ல் "கடவுள் மிகுந்த இரக்கம் உடையவர். அவர் நம்மீது மிகுந்த அன்பு கொண்டுள்ளார்" என இறையிரக்கத்தை இறைவனின் பண்பாகக் குறிப்பிடுகின்றார்.

இரக்கம் இறைப்பண்பு எனும் கருத்து பழைய ஏற்பாட்டில் ஒரு அமைப்பு முறையைக் கொண்டுள்ளது. அதாவது, மானிடர் பாவிகள் அல்லது பாவம் செய்பவர்களாக இருப்பர், இறைவன் அவர்களை நீதியின்படி தண்டிப்பார், பின் அவர்கள் மீது மிகுந்த இரக்கம் காட்டுவார். உதாரணத்திற்கு எரே 31:20–ல் "உனக்கு (எப்ராயிமுக்கு) எதிராக நான் அடிக்கடி பேசிய போதிலும்" என இறைவன் குறிப்பிடுவது அவர்களின் பாவங்களுக்கு தண்டனையாக பார்க்கப்படலாம், ஆனால் "உன்னை நான் இன்னும் நினைவில் கொண்டிருக்கிறேன்; உனக்காக என் இதயம் ஏங்கித் தவிக்கின்றது. திண்ணமாய் உனக்கு நான் இரக்கம் காட்டுவேன்" என்பது அவரது மிகுந்த இரக்கத்தைக் காட்டுகின்றது. விப 34:7லும் மூன்றாம் நான்காம் தலைமுறை பாவங்களுக்கு தண்டனைத் தீர்ப்புத் தந்தாலும் ஆயிரம் தலைமுறைக்கு பேரன்பு செய்பவர்.[8]

எனவே இறைவனின் இரக்கம், மனிதரின் பாவம்→ தண்டனை→இறைவனின் பேரிரக்கம் எனும் முறையில் செயல்படுகின்றது. எனவே அவரை 'இரக்கம் நிறைந்த கடவுள்' என அழைப்பது சாலவும் சிறந்தது.

**ஆ. மீட்பின் வரலாற்றில் இறையிரக்கச் செயல்பாடு**

விவிலியத்தில் எப்படி இறைவன் செயல்படுகிறார் என்பது அனைவருக்கும் வெள்ளிடைமலை. ஆனால் அதை பவுலடியார் எப்படி விளக்குகின்றார் என்பதை மட்டும் இவண் காண்போம்.

பவுலடியாரின் கண்ணோட்டத்தில் மீட்பின் மையம் இயேசுவின் வழியாக வந்த அல்லது இயேசுவாக வந்த நற்செய்தி (காண். உரோ 1:16–17). அதற்கு முன் மானிடம் முழுவதும் பாவ நிலைக்கு உட்பட்டிருந்தது. மீட்பில்லா நிலையிலிருந்தது. பவுலடியாரின் கண்ணோட்டத்தில் மானுடத்தை யூதர் என்றும் புறவினத்தார் என்றும் இருபெரும் பிரிவுகளாக பிரிக்கலாம். இவற்றுள் புறவினத்தார் உண்மை இறைவனை கண்டுகொள்ளாமல் படைக்கப்பட்டவற்றை வழிபட்டத்தால் பாவம் செய்தார் (காண். உரோ 1:19–21). யூதர்கள் உண்மை இறைவனை அறிந்திருந்தும், திருச்சட்டத்தை பெற்றிருந்தும் அதை கடைபிடிக்கத் தவறியவர்களாதலால் பாவிகளாயினர் (காண். உரோ 2:12–14). இத்தகு பின்னணியில் இறையிரக்கம் செயல்படுகின்றது.

இந்த இரக்கத்தின் இன்னொரு பண்பு, இறைவன் தான் விரும்புபவர்களுக்கு தனது, இரக்கத்தைக் காட்டுகின்றார். எனவே யாரும் இதை 'உரிமை' எனப் பெற முடியாது, மாறாக 'கொடை' என்றே பெற்றுக்கொள்ள முடியும். இதை வலியுறுத்த பவுலடியார், கடவுள் மோசேவுக்கு கூறிய வார்த்தைகளை[9] மேற்கோளாகக் காட்டுகின்றார். எனவே "மனிதர் விரும்புவதாலோ உழைப்பதாலோ எதுவும் ஆவதில்லை; கடவுள் இரக்கம் காட்டுவதாலேயே எல்லாம் ஆகிறது" (உரோ 9:16) என்றும், "கடவுள் தாம் விரும்புவதுபோலச் சிலருக்கு இரக்கம் காட்டுகிறார்" (உரோ 9:18) என்றும் உறுதியாய் கூறுகிறார் பவுலடியார். இத்தகைய இரக்கம் பெற்றவர்களை இறைவனின் "இரக்கத்திற்கு உரித்தான கலன்கள்" (உரோ 9:23) என்கிறார். அவர்களில் இறைவன் தன் மாட்சியை வெளிப்படுத்துகின்றார்.[10] சுருங்கக் கூறின் மீட்பின் வரலாற்றில் "அனைவருக்கும் (யூதருக்கும், புறவினத்தாருக்கும்) இரக்கம் காட்டு வதற்காகவே கடவுள் அனைவரையும் கீழ்ப்படியாமைக்கு உட்படுத்தினார் (காண். உரோ 11:32). இந்த இரக்கம் இயேசுவிலே உருவெடுத்து வந்தது. இதை பவுலடியார் எப்படி விளக்குகிறார் எனக் காண்போம்.

### இ. இரக்கமாய் உருவெடுத்த இயேசு

பாவ நிலைக்கு உட்பட்டிருந்த மானுடத்தை மீட்க இறைவன் செய்த குறுக்கிட்டு செயல்பாடுதான் இயேசுவின் 'மனிதராதல்' நிகழ்வு. இதை பவுலடியார், "காலம் நிறைவேறியபோது திருச்சட்டத்திற்கு உட்பட்டிருந்த நம்மை மீட்டுத் தம் பிள்ளைகள் ஆக்குமாறு கடவுள் தம் மகனைப் பெண்ணிடம் பிறந்தவராகவும் திருச்சட்டத்திற்கு உட்பட்டவராகவும் அனுப்பினார்" எனக் குறிப்பிடுகின்றார் (கலா 4:4–5). எனவே இயேசுவின் பிறப்பே இறையிரக்கச் செயல்பாடு. அதைவிட அவரது பாடுகள், மரணம், உயிர்ப்பிலும் இறைவனது இரக்கம் துலங்குகிறது. அதை பவுலடியார் விளக்கும் விதத்திலேயே அளிக்க முயல்வோம்.

இயேசுவின் பாடுகளில் நிகழ்வது என்னவெனில், "கடவுள் பாவம் அறியாத அவரைப் பாவநிலை ஏற்கச் செய்தார்" (2 கொரி 5:21). எனவேதான் திருத்தந்தை இரண்டாம் ஜான்பால், "இரக்கத்தின் உச்சக்கட்டம் பாஸ்கா மறைபொருள் எனலாம்; ஏனெனில் இதனால் இரக்கம் வெளிப்படுத்தப்பட்டது, அருளவும்பட்டது"[11] என்கின்றார். மேலும், "கடவுள் மனிதர்பால். . . காட்டும் கருணையின் உயரிய கருவியாகச் சிலுவை விளங்குகின்றது"[12] என்றும் விளக்குகிறார்.

இயேசுவின் பாடுகளைப் பற்றி விளக்கும் போது, பவுலடியார் அதை மனிதரின் பாவத்திற்கு கழுவாய் எனவும் (காண். உரோ 3:25) கூறுகின்றார். இந்த கருத்து லேவி 16–ல் காணப்படும் இரக்கத்தின் இருக்கையில் நிகழ்த்தப்படும் பாவக் கழுவாய் சடங்கு மற்றும் போக்கு ஆடு ஆகியவற்றின் பின்னணியில் புரிந்துகொள்ளப்பட வேண்டும். அதாவது, பாவநிலையிலுள்ள மானுடம் (யூதரும், புறவினத்தாரும்) தங்களைத் தாங்களே மீட்டுக் கொள்ள முடியாது. எனவே இறைவனுக்கும், மானிடருக்கு பொதுவாக, இரு பண்புகளையும் (இறை–மனித) கொண்ட ஒருவர்தான் இதைச் செய்யமுடியும். எனவே இயேசு தனது பாடுகள் மரணம் வழியாக இதைச் செய்தார். பவுலடியார் இதை இவ்வாறு விளக்குகின்றார்: "ஊனியல்பு கொண்ட மனிதரைப் போன்றவராய்த் தம் சொந்த மகனை அனுப்பி மனிதரிடமுள்ள பாவத்திற்கு முடிவு கட்டினார்" (உரோ 8:3; மேலும் காண். கலா 3:13).[13] எனவே இயேசு செய்தது ஓர் இரக்கச் செயல்: பாவப்பட்ட மானுடத்திற்காக அதைச் செய்தார். (காண். உரோ 1:17; 3:21–26; 5:8; கலா 2:20 "(இவரே (இயேசு) என் மீது அன்பு கூர்ந்தார். எனக்காகத் தம்மையே ஒப்புவித்தார்); 2 கொரி 5:18 ("அவரே (கடவுளே) கிறிஸ்துவின் வாயிலாக நம்மைத் தம்மோடு ஒப்புரவாக்கினார்" 2 கொரி 5:19, 21).

இயேசுவின் பாடுகள், மரணத்தோடு இணைந்து வருகின்ற இயேசுவின் உயிர்ப்பும், இறையிரக்க செயலே என, பவுலடியார் குறிப்பிடுகின்றார்: "நம் குற்றங்களுக்காகச் சாகுமாறு கடவுள் இயேசுவை ஒப்புவித்தார்; நம்மைத் தமக்கு ஏற்புடையவர்கள் ஆக்குமாறு அவரை உயிர்த்தெழச் செய்தார்" (உரோ

4:25). எனவே திருத்தந்தை இரண்டாம் ஜான்பால், 'கிறிஸ்து மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார்' என்னும் உண்மை அவரது மீட்புப் பணியின் இறுதி அடையாளமாக அமைகிறது; தீமையின் ஆதிக்கத்துக்கு உட்பட்ட உலகில் இரக்கமிகு அன்பு பற்றிய முழு வெளிப்பாட்டையும் நிறைவுக்குக் கொண்டு வரும் அடையாளமாக விளங்குகிறது''[14] என்கிறார். எனவே மீட்பின் வரலாறு முழுவதும், இயேசு நிகழ்வு உட்பட, இறைவனது இரக்கச் செயல்பாடே.

**ஈ. இயேசு நிகழ்வு உலகிலும், மாந்தரிலும் ஏற்படுத்தும் விளைவு**

இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பின் வழியாக மானுடத்திற்கு நல்ல பல விளைவுகள் நிகழ்ந்தன. இவற்றை பவுலடியார் ஆங்காங்கு விவரிக்கின்றார். அவற்றை இவண் பட்டியலிட முயல்வோம்.

- சாவின்மீது வெற்றி கிடைத்தது (காண். 1 கொரி 15:54–57).
- துன்பப்படுவோருக்கு உதவ இயேசு வல்லவரானார் (காண். எபி 2:17–18).
- ''கடவுள் மிகுந்த இரக்கம் உடையவர். . . குற்றங்களின் காரணமாய் இறந்தவர்களாயிருந்த நாம் அவ்வன்பின் மூலம் இணைந்து உயிர்பெறச் செய்தார்'' (எபே 2:4–5அ).
- நாம் மீட்படைந்தோம் (காண். தீத் 3:5; எபே 2:5 ஆ).
- நாம் அவரோடு உயிர்த்தெழுந்து விண்ணுலகில் அமரச் செய்வார் (காண். எபே 2:6).
- ''மனிதர் இறை வாழ்வில் பங்குகொள்ள அழைக்கப்படுகின்றனர். கடவுளின் ஏற்பு மகவு என்னும் முறையில், கடவுளில் விளங்கும் உண்மையிலும் அன்பிலும் பங்குகொள்ள. . . அழைக்கப்படுகின்றனர்.''[15]
- ''எனவே, நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற வேளையில் உதவக் கூடிய அருளைக் கண்டடையவும், அருள் நிறைந்த இறை அரியணையைத் துணிவுடன் அணுகிச் செல்வோமாக'' (எபி 4:16).

**உ. செயல்பாட்டுக்கும், அறநெறி வாழ்வுக்கும் அழைக்கும் இரக்கம்**

மனுக்குலத்தின் மீது இரக்கம் கொண்டு தம் மகன் வழியாக நமக்கு மீட்பளித்து, தமது ஏற்புடைய பிள்ளைகளாக நம்மை ஏற்றுக் கொண்ட இறைவனுக்கு ஏற்ற வாழ்வு வாழவும் பவுலடியார் தம் காலத்து கிறிஸ்தவர்களை அழைக்கத் தவறவில்லை. இறைவனை 'அப்பா' 'தந்தையே' என அழைப்பவரின் அறநெறி வாழ்வும் இரக்கம் நிறைந்ததாய் இருக்க வேண்டும் என பவுலடியார் வலியுறுத்துகின்றார்: ''சகோதர சகோதரிகளே, கடவுளுடைய இரக்கத்தை முன்னிட்டு உங்களை வேண்டுகிறேன். கடவுளுக்கு உகந்த தூய, உயிருள்ள பலியாக உங்களைப் படையுங்கள்'' (உரோ 12:1). எனவே வாழ்வையே வழிபாடாக மாற்றி இறைவனுக்கு அர்ப்பணிக்கச் சொல்கிறார். இரக்கத்தோடு தொடர்புடைய சில செயல்பாடுகளையும் ஆங்காங்கு கோடிட்டு காட்டுகின்றார்.

- சினமுற்றாலும் பாவம் செய்யாதிருங்கள்; பொழுது சாய்வதற்குள் உங்கள் சினம் தனியட்டும் (எபே 4:26).
- கற்றுக் கொடுப்போர் கற்றுக் கொடுப்பதிலும், ஊக்கமூட்டுவோர் ஊக்கம் தருவதிலும், தமக்குள்ளதை வழங்குவோர் தாராளமாய்க் கொடுப்பதிலும், தலைமை தாங்குவோர் முழு ஆர்வத்தோடு செயல்படுவதிலும், இரக்கச் செயல்களில் ஈடுபடுவோர் முகமலர்ச்சியோடு அவற்றைச் செய்வதிலும் தாம் பெற்ற அருள்கொடைகளைப் பயன்படுத்த வேண்டும்'' (உரோ 12:8).
- ''தூய ஆவியின் தூண்டுதலுக்கு ஏற்ப வாழுங்கள்'' (கலா 5:16; மேலும் கலா 5:22–26).
- ''கடவுள் அருளும் எல்லாப் படைக்கலன்களையும் எடுத்துக்கொள்ளுங்கள்'' (எபே 6:13; மேலும் வச. 14–18).
- ''நீங்கள் கடவுளால் தேர்ந்து கொள்ளப்பட்டவர்கள், அவரது அன்பிக்குரிய இறைமக்கள். எனவே அதற்கிசைய பரிவு, இரக்கம், நல்லெண்ணம், மனத்தாழ்மை, கனிவு, பொறுமை ஆகிய பண்புகளால் உங்களை அணிசெய்யுங்கள்'' (கொலோ 3:12).

சுருங்கக் கூறின் ''உங்கள் தந்தை இரக்கமுள்ளவராய் இருப்பதுபோல நீங்களும் இரக்கம் உள்ளவர்களாய் இருங்கள்'' (லூக் 6:36) என்று இயேசு கூறியதை பவுலடியார் பல்வேறு விதங்களில் விவரித்துக் கூறுகின்றார்.

**முடிவாக. . .**

பவுலடியாருக்கு இறையிரக்கம் முதலில் ஓர் இறையனுபவமாக அமைந்தது. தொடக்கத் திருஅவையின் அனுபவமாகவும் அது இருந்தது. இறையிரக்கத்தை இறையியல் கோட்பாடு என நோக்குமிடத்து, பவுலடியாருக்கு அது பழைய ஏற்பாட்டு இறைக் கொள்கையில் வேர் கொண்டுள்ளது. பழைய ஏற்பாட்டு பாரம்பரியத்தில் நின்று பவுலடியார் இறைவனை 'இரக்கம் நிறைந்த கடவுள்' (2 கொரி 1:3) என அழைக்கின்றார். ஆனால் அவரின் இரக்க செயல்பாடு புதிய ஏற்பாட்டிலும் தொடர்கின்றது. இயேசுவின் மனிதராதல் நிகழ்விலும், அவரின் பாடுகள் – மரணம் – உயிர்ப்பு எனும் 'இயேசு நிகழ்விலும்' அது வெளிப்படுகின்றது. எனவே புதிய பாஸ்கா நிகழ்வு முழுவதும் இறைவனின் இரக்க செயல்பாடே. இதன் விளைவாக மானுடம் மீட்கப்பட்டு, இறைவனின் ஏற்பு பிள்ளைகளாகப் பட்டுள்ளனர் எனும் உயர் நிலையை தந்தது. எனவே இவ்வாறு இறையிரக்கத்தை சுவைத்த, அனுபவித்த இறைமக்கள் இரக்க செயல்பாடுகளில் ஈடுபட்டு இறையிரக்கத்திற்கு ஏற்ற அறநெறியில் சிறந்த மக்களாக இருக்க வேண்டும் என பவுலடியார் வலியுறுத்தி அறிவுறுத்துகின்றார்.

**அடிக் குறிப்பு**

1. காண். கலா 6:16: 'கடவுளின் மக்களாகிய இஸ்ரயேலருக்கும் அமைதியும் இரக்கமும் உரித்தாகுக; 1 திமொ 1:2: நம் ஆண்டவராம் இயேசு கிறிஸ்துவிடமிருந்தும் அருளும் இரக்கமும் அமைதியும் உரித்தாகு! மேலும் காண். 2 திமொ 1:2.
2. இவற்றைப் பற்றிய நீண்ட விவாதத்தை 'இரக்கம் மிகுந்த கடவுள்' எனும் இரண்டாம் ஜான் பால் அவர்களின் சுற்றுமடலில் அடிக் குறிப்பு எண் 52–ல் காண்க.
3. இவ்வார்த்தையோடு தொடர்புடைய வேறு சொல் 'எமத்' ஆகும். அது பற்றுறுதி என மொழிபெயர்க்கப் படுகின்றது.
4. "ஆண்டவர்! இரக்கமும் பரிவும் உள்ள இறைவன்; சினம் கொள்ளத் தயங்குபவர்; பேரன்பு மிக்கவர்; நம்பிக்கைக்குரியவர். ஆயிரம் தலைமுறைக்கும் பேரன்பு செய்பவர்; கொடுமையையும் குற்றத்தையும் பாவத்தையும் மன்னிப்பவர்." மேலும் காண். இச 13:17; விப 33:19.
5. காண். விடுதலைப்பயணத்தில் விப 3:7–11; 6:5; சிறைபிடிப்பினின்று: இச 30:3; எசா 49:10, 13; 30:18; எரே 12:15; எசே 39:25; இறுதி நாட்களில் எசா 54:8; 55:3; எரே 33:6.
6. காண். திபா 25:6; 89:49; 40:11; 51:1; 69:16–18; 77:9; 79:8; 103:4; 108:8 முதல்.
7. காண். எரே 31:20; எசா 49:14–16; 54:7 முதல்; ஓசே 2:16; எரே 3:12 முதல்; எசா 55:7; ஓசே 1:6–7.
8. மேலும் காண். எசா 49:14–16; 54:7; ஓசே 2:16; எசா 55:7.
9. யார் யாருக்கு இரக்கம் காட்ட விரும்புகிறேனோ, அவர்களுக்கு இரக்கம் காட்டுவேன் (உரோ 9:15; மேலும் காண். விப 33:19).
10. இங்கு இந்த கலன்கள் உருவகம் பழைய ஏற்பாட்டின் இறைவனின் சினக் கிண்ணத்துக்கு மாற்றாக (காண். எசா 51:17) தரப்படுகிறது.
11. இரண்டாம் ஜான்பால், இரக்கம் மிகுந்த கடவுள், எண் 7. மொழி செ. சூசைமாணிக்கம், திருச்சி: தேடல், 2015, 101,
12. மேலது, பக். 105.
13. எபிரேயருக்கு எழுதிய மடல் இரக்கத்தின் இருக்கையை, பாவக்கழுவாய் சடங்கை இயேசுவுக்கு பொருத்தி விளக்குகிறது (காண். எபி 9:10).
14. இரண்டாம் ஜான்பால், இரக்கம் மிகுந்த கடவு,ள எண் 8, மொழி. செ. சூசைமாணிக்கம், திருச்சி: தேடல், 2015, 106.
15. இரண்டாம் ஜான்பால், இரக்கம் மிகுந்த கடவுள், எண். 7 மொழி. செ. சூசைமாணிக்கம், திருச்சி : தேடல், 2015, 102; மேலும் காண். கலா 4:5–7; உரோ 8:15–17.

**அருள்பணி. A. ஜான் பாப்டிஸ்ட்**